فضائل عشرة ذي الحجة وأحكام الاضحية

துல்ஹஜ் பத்தின் சிறப்புகள் மற்றும் குர்பானியின் சட்டங்கள்

DACE ISLAMIC INFORMATION CENTER
DIIC
CHENNAI

فضائل عشرة ذي الحجة
وأحكام الاضحية

துல்ஹஜ் பத்தின் சிறப்புகள்
மற்றும்
குர்பானியின் சட்டங்கள்

தொகுப்பு :

H. ஹசன் அலி உமரி

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அகிலத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பபப்பட்ட எங்கள் நபி முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் அன்னாரின் உறவினர், உத்தம தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக!

துல்ஹஜ் மாதத்தின் சிறப்புகள், அதில் செய்யப்பட வேண்டிய அமல்கள், குர்பானியின் முக்கியத்துவம் மற்றும் குர்பானியின் சட்டங்கள் ஆகியவற்றின் தகவல்களை குர்ஆன் மற்றும் சுன்னாவின் ஒளியில் இந்த சிறிய புத்தகத்தில் தொகுத்து உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

துல்ஹஜ்: ஹஜ்ஜின் கிரியைகள் அனைத்தையும் இந்த மாதத்தில் நிறைவேற்றப்படுவதால் இதற்கு துல்ஹஜ் மாதம் என்ற பெயர் வரலாயிற்று.

துல்ஹஜ் பத்து நாட்களின் சிறப்புகள்

துல்ஹஜ் புனித மாதங்களில் ஒன்றாகும்

إِنَّ عِدَّةَ ٱلشُّهُورِ عِندَ ٱللَّهِ ٱثۡنَا عَشَرَ شَهۡرًا فِي كِتَٰبِ ٱللَّهِ يَوۡمَ خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضَ مِنۡهَآ أَرۡبَعَةٌ حُرُمٌ

வானங்களையும், பூமியையும் படைத்த நாளில், (இருந்து மறுமைநாள் வரை நடந்தேறும் அனைத்து விஷயங்களும் எழுதப்பட்ட) அல்லாஹ்வின் பதிவேட்டில் உள்ளவாறு நிச்சயமாக மாதங்களின் எண்ணிக்கை அல்லாஹ்விடத்தில் (ஒரு வருடத்திற்குப்) பன்னிரண்டு மாதங்களாகும்: அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவையாகும். (9:36)

புனிதமிக்க மாதங்களில் துல்ஹஜ் மாதம் ஒன்றாகும். இந்த மாதத்தின் சிறப்பை, குறிப்பாக முதல் பத்து நாட்களின் சிறப்பை வலியுறுத்தி குர்ஆன் மற்றும் சுன்னாவில் பல தகவல்களை காணலாம்.

துல்ஹஜ் முதல் பத்து நாட்கள்

துல்ஹஜ் முதல் பத்து நாட்கள் மிக சிறப்பிற்குரிய நாட்களாகும்.

عَنِ ابْنِ عَبَّاسٍ عَنِ النَّبِىِّ صلى الله عليه وسلم أَنَّهُ قَالَ « مَا الْعَمَلُ فِى أَيَّامِ الْعَشْرِ أَفْضَلَ مِنَ الْعَمَلِ فِى هَذِهِ » . قَالُوا وَلاَ الْجِهَادُ قَالَ وَلاَ الْجِهَادُ ، إِلاَّ رَجُلٌ خَرَجَ يُخَاطِرُ بِنَفْسِهِ وَمَالِهِ فَلَمْ يَرْجِعْ بِشَىْءٍ (رواه البخاري)

(துல்ஹஜ்) பத்து நாட்களில் செய்யும் நல்லறங்கள் மற்ற நாட்களில் செய்யப்படும் நல்லறத்தை விட மிக சிறந்ததாகும் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விடவுமா என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதைவிடவும் தான். ஆனால், தன் உயிரையும் பொருளையும் பணயம் வைத்துப் புறப்பட்டு இரண்டையும் (அல்லாஹ்வின் பாதையில்) இழந்து விட்டவர் செய்த ஜிஹாதைத் தவிர என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ், நூல்: புகாரி 969)

عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم« مَا مِنْ أَيَّامٍ الْعَمَلُ الصَّالِحُ فِيهِنَّ أَحَبُّ إِلَى اللَّهِ مِنْ هَذِهِ الأَيَّامِ الْعَشْرِ. (رواه أبو داؤد والترمزي)

(துல்ஹஜ்) பத்து நாட்களில் செய்யும் நல்லறங்கள், மற்ற நாட்களில் செய்யப்படும் நல்லறங்களைவிட அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானதாகும். என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத் 2440, திர்மிதீ 762)

துல்ஹஜ் முதல் பத்து நாட்களின் சிறப்பிற்குரிய காரணம்

இந்த பத்து நாட்களில் தான் தொழுகை, நோன்பு, ஹஜ், ஸதஃகா போன்ற வணக்கங்கள் அனைத்தும் ஒன்றாக நிறைவேற்றப்படுகின்றன. மற்ற நாட்களில் இவை அனைத்தையும் ஒன்றாக நிறைவேற்றப்படுவதில்லை. இதுவே இந்த பத்து நாட்களின் சிறப்பிற்குரிய காரணம் என்று இப்னு ஹஜ்ர் அல்-அஸ்கலானி அவர்கள் தனது (புகாரியின் விளக்கவுரையான) ஃபத்ஹுபாரியில் (2/460) குறிப்பிட்டுள்ளார்கள்.

துல்ஹஜ் பத்தில் செய்ய வேண்டிய அமல்கள்

1. ஹஜ் - உம்ரா

عَنْ أَبِى هُرَيْرَةَ رضى الله عنه أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ الْعُمْرَةُ إِلَى الْعُمْرَةِ كَفَّارَةٌ لِمَا بَيْنَهُمَا، وَالْحَجُّ الْمَبْرُورُ لَيْسَ لَهُ جَزَاءٌ إِلاَّ الْجَنَّةُ (رواه البخاري)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: ஓர் உம்ரா செய்வது மறு உம்ரா வரையில் உள்ள பாவஙகளின் பரிகாரமாகும். பாவம்கலவாத ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சொர்க்கத்-

தைத் தவிர வேறு கூலியில்லை. (அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﵁, **நூல்: புகாரி 1773)**

2. நஃபிலான நோன்புகள் நோற்பது

عَنْ أَبِى سَعِيدٍ الْخُدْرِىِّ رضى الله عنه قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم « مَا مِنْ عَبْدٍ يَصُومُ يَوْمًا فِى سَبِيلِ اللَّهِ إِلاَّ بَاعَدَ اللَّهُ بِذَلِكَ الْيَوْمِ وَجْهَهُ عَنِ النَّارِ سَبْعِينَ خَرِيفًا » (رواه مسلم)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், எவர் அல்லாஹ்வின் பாதையில் (திருப்தியை நாடி) ஒரு நாள் நோன்பு நோற்கிறாரோ அவருடைய முகத்தை அல்லாஹ் எழுபது ஆண்டுகள் (பயணத்) தொலைவிற்கு நரகத்தை விட்டு அப்புறப்படுத்துவான். (அறிவிப்பாளர்: அபூ ஸயீத் அல்-குத்ரி ﵁, நூல்: முஸ்லிம் - 2764)

ஹஜ்ஜிப் பெருநாளை தவிர்த்து மற்ற ஒன்பது நாட்களில் ஒருவர் நோன்பு நோற்க விரும்பினால் நோன்பு நோற்கலாம். தடை ஏதுமில்லை.

3. அர:ஃபா நோன்பு

عَنْ أَبِى قَتَادَةَ عَنْ النَّبِىَّ صلى الله عليه وسلم قال صِيَامُ يَوْمِ عَرَفَةَ أَحْتَسِبُ عَلَى اللَّهِ أَنْ يُكَفِّرَ السَّنَةَ الَّتِى قَبْلَهُ وَالسَّنَةَ الَّتِى بَعْدَهُ

அரஃபா தினத்தில் நோன்பு (நோற்பவருக்காக) அதற்கு முந்திய வருடத்தின் பாவங்களையும்‘ அதற்கு பிந்திய வருடத்தின் பாவங்களையும் அல்லாஹ் மன்னிப்பான் என நான் எதிர்ப்பார்க்கிறேன். என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபூ கதாதா رضي الله عنه நூல்: முஸ்லிம் 2803)

அர:ஃபா தினத்தின் நோன்பை ஹஜ் செய்பவர்கள் நோற்கக் கூடாது.

عَنْ أُمِّ الْفَضْلِ شَكَّ النَّاسُ يَوْمَ عَرَفَةَ فِى صَوْمِ النَّبِىِّ صلى الله عليه وسلم فَبَعَثْتُ إِلَى النَّبِىِّ صلى الله عليه وسلم بِشَرَابٍ فَشَرِبَهُ (رواه البخاري)

அரஃபா நாளில் நபி ﷺ அவர்கள் நோன்பு வைத்திருக்கின்றார்களோ என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டது. எனவே, நான் நபி ﷺ அவர்களுக்குப் பானம் அனுப்பிவைத்தேன். அதையவர்கள் குடித்தார்கள். (அறிவிப்பாளர்: உம்முல் ஃபள்ல் رضي الله عنها, **நூல்:** புகாரி 1658)

4. தக்பீர் கூறுவது

لِّيَشْهَدُوا۟ مَنَـٰفِعَ لَهُمْ وَيَذْكُرُوا۟ ٱسْمَ ٱللَّهِ فِىٓ أَيَّامٍ مَّعْلُومَـٰتٍ عَلَىٰ مَا رَزَقَهُم مِّنۢ بَهِيمَةِ ٱلْأَنْعَـٰمِ ۖ فَكُلُوا۟ مِنْهَا وَأَطْعِمُوا۟ ٱلْبَآئِسَ ٱلْفَقِيرَ ﴿٢٨﴾

தங்களுக்குரிய (இம்மை மறுமையின்) பலன்களை அவர்கள் அடைவதற்காகவும், அல்லாஹ்வின் பெயரை அவன் அவர்களுக்குக் கொடுத்த (குர்பானிப் பிராணிகளான ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) நாற்கால் பிராணிகள் மீது குறிப்பிட்ட நாட்களில் கூறுவதற்காகவும் (வருவார்கள்) ஆகவே, அ(றுக்கப்பட்ட)வைகளிலிருந்து நீங்களும் புசியுங்கள்: கஷ்டப்படும் ஏழைக்கும் உண்ணக்கொடுங்கள். (22:28)

குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ்வின் பெயரை நினைவு கூர்வர் என்ற வசனத்திற்கு துல் ஹஜ்ஜின் பத்து நாட்கள் என இப்னு அப்பாஸ் ﵁ அவர்கள் விளக்கமளித்துள்ளார்கள். (புகாரி)

இப்னு உமர் ﵁ அபூ ஹுரைரா ﵁ ஆகிய இருவரும் பத்து நாட்களும் கடைவீதிக்குச் சென்று தக்பீர் கூறுவார்கள். மக்களும் அவர்களுடன் தக்பீர் கூறுவார்கள். (புகாரி)

துல்ஹஜ் பத்து நாட்களும் அல்லாஹுஅக்பர் மற்றும் அதன் பொருளில் உள்ள வார்த்தைகளை கூறி தக்பீர் கூறுவது மற்றும் அல்லாஹ்வின் பெயரை நினைவு கூறுவது சிறந்ததாகும். பொதுவான இந்த தக்பீரை பள்ளிவாசல், வீடு, கடைவீதி போன்ற இடங்களில் கூறலாம்.

பெருநாளுக்காக கூறக்கூடிய தக்பீரை அரஃபா நாளின் பஜ்ர் தொழுகையிலிருந்து துல் ஹஜ் பிறை 13 ஆம் நாள் அஸ்ர் வரையில் கூறலாம்.

عَنْ أَبِي عَبْدِ الرَّحْمَنِ ، عَنْ عَلِيٍّ ؛ أَنَّهُ كَانَ يُكَبِّرُ بَعْدَ صَلاَةِ الْفَجْرِ يَوْمَ عَرَفَةَ إِلَى صَلاَةِ الْعَصْرِ مِنْ آخِرِ أَيَّامِ التَّشْرِيقِ (مصنف ابن أبي شيبة 165/2)

அலி ﵁ அவர்கள் அரஃபா நாளின் பஜ்ர் தொழுகையிலிருந்து அய்யாமுத் தஷ்ரீக்கின் (பிறை 13) கடைசி நாளின் அஸர் வரை தக்பீர் கூறிக் கொண்டிருப்பார்கள். (அறிவிப்பாளர்: அபு அப்திர் ரஹ்மான், நூல்:முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா 2/165)

தக்பீரில் என்ன கூறவேண்டும்?

عن شَرِيكٌ قَالَ : قُلْتُ لأَبِي إِسْحَاقَ : كَيْفَ كَانَ تَكْبِيرُ عَلِيٍّ ، وَعَبْدِ اللهِ ؟ فَقَالَ : كَانَا يَقُولاَنِ : اللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ ، وَاللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ. (مصنف ابن أبي شيبة 168/2) (حسن)

அலி ﵁ மற்றும் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ﵁ அவர்கள் எவ்வாறு (பெருநாள்) தக்பீரை கூறுவார்கள் என்று நான் அபூ இஸ்ஹாக்(رحمه الله) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள், (அல்லாஹுஅக்பர், அல்லாஹுஅக்பர், லா இலாஹ இல்லல்லாஹு, வல்லாஹுஅக்பர், அல்லாஹுஅக்பர், வலில்லாஹில் ஹம்து.) என்று கூறுவார்கள் என்று பதிலளித்தார்கள். (அறிவிப்பாளர்: ஷரீக் (رحمه الله), நூல்: முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா 2/168 - ஹஸன்)

தக்பீரில் (الله أكبر) என்கின்ற வார்த்தையை மூன்று முறை கூறுவதற்கும் ஆதாரம் உள்ளது. (பார்க்க: முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா 2/165)

குறிப்பு: பெருநாள் தக்பீரை ஒருவர் கூற மற்றவர்கள் அவரை பின் தொடர்ந்து கூறுவதற்கு ஆதாரமில்லை. எனவே தக்பீரை ஒவ்வொருவரும் தனிதனியாக கூற வேண்டும்.

5. பெருநாள் தொழுகை

இது ஒரு கடமையான தொழுகையாகும். இந்த தொழுகையை கண்டிப்பாக தொழவேண்டும்.

عَنْ أُمِّ عَطِيَّةَ قَالَتْ أُمِرْنَا أَنْ نُخْرِجَ الْحُيَّضَ يَوْمَ الْعِيدَيْنِ وَذَوَاتِ الْخُدُورِ ، فَيَشْهَدْنَ جَمَاعَةَ الْمُسْلِمِينَ وَدَعْوَتَهُمْ ، وَيَعْتَزِلُ الْحُيَّضُ عَنْ مُصَلاَّهُنَّ . قَالَتِ امْرَأَةٌ يَا رَسُولَ اللَّهِ ، إِحْدَانَا لَيْسَ لَهَا جِلْبَابٌ . قَالَ « لِتُلْبِسْهَا صَاحِبَتُهَا مِنْ جِلْبَابِهَا » (رواه البخاري)

இரு பெருநாட்களில் மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்களையும் திரைக்குள்ளிருக்கும் (பருவ-மடைந்த) பெண்களையும் (தொழுகைத் திடலுக்கு) அனுப்பிவைக்குமாறு நாஙகள் (இறைத்தூதரால்) பணிக்கப்பட்டோம். “பெண்கள் அனைவரும் முஸ்லிம்களின் கூட்டுத் தொழுகையில் பஙகு கொள்ள வேண்டும் , முஸ்லிம்களின் பிரசார-த்திலும் கலந்துகொள்ள வேண்டும். மாதவிடா-யுள்ள பெண்கள் மற்ற பெண்கள் தொழும் இடத்திலிருந்து விலகியிருக்க வேண்டும் ” (என்று

நபி ﷺ அவர்கள் கூற, இதைக் கேட்டுக் கொண்டிருந்த) ஒரு பெண், “அல்லாஹ்வின் தூதரே! எங்களில் சிலரிடம் அணிந்துகொள்ள மேலங்கி இல்லையே (அவள் என்ன செய்வாள்)! ,” என்று கேட்டார். அதற்கு நபி ﷺ அவர்கள் “(ஒரு பெண்ணிடம் மேலங்கி இல்லாவிட்டால்) அவளுடைய தோழி தனது மேலங்கிகளில் ஒன்றை அவளுக்கு (இரவலாக) அணியக் கொடுக்கட்டும்!” என்றார்கள். **(அறிவிப்பாளர்: உம்மு அத்திய்யா ؓ, நூல்: புகாரி 351)**

ஐந்து வேளை கடமையான தொழுகையைக்கூட வீட்டில் தொழுவதுதான் பெண்களுக்கு சிறந்தது என்று கூறிய நபி ﷺ அவர்கள் பெருநாள் தொழுகைக்கு பெண்களும் வரவேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்கள். இதிலிருந்து பெருநாள் தொழுகையின் முக்கியத்துவத்தையும், அது கடமை என்பதினையும் அறியலாம்.

وَأَمَرَ أَنَسُ بْنُ مَالِكٍ مَوْلاَهُمُ ابْنَ أَبِى عُتْبَةَ بِالزَّاوِيَةِ ، فَجَمَعَ أَهْلَهُ وَبَنِيهِ ، وَصَلَّى كَصَلاَةِ أَهْلِ الْمِصْرِ وَتَكْبِيرِهِمْ .

அனஸ் ؓ அவர்கள் (பஸராவுக்கு ஒதுக்குப் புறமாக அமைந்த) ஸாவியா என்ற இடத்தில் தம் அடிமையையும் தம் மனைவி மக்களையும்

திரட்டி நகர வாசிகள் தொழுதது போல் தொழுதார்கள். அவர்கள் தக்பீர் கூறுவது போல் கூறினார்கள்.

وَقَالَ عِكْرِمَةُ أَهْلُ السَّوَادِ يَجْتَمِعُونَ فِى الْعِيدِ يُصَلُّونَ رَكْعَتَيْنِ كَمَا يَصْنَعُ الإِمَامُ .

கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் பெருநாள் தினத்தில் ஒன்று கூடி இமாம் செய்வது போலவே இரண்டு ரக்அத்துகள் தொழ வேண்டும் என்று இக்ரிமா (رحمه الله) கூறினார்கள்.

وَقَالَ عَطَاءٌ إِذَا فَاتَهُ الْعِيدُ صَلَّى رَكْعَتَيْنِ

ஒருவருக்கு பெருநாள் தொழுகை தவறி விட்டால் அவர் இரண்டு ரக்அத்துகள் தொழ வேண்டும் என்று அதாஃ (رحمه الله) குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த தகவல்களை இமாம் புகாரி (رحمه الله) அவர்கள் தனது ஸஹீஹுல் புகாரியில் பெருநாள் தொழுகையை தவறி விட்டால் இரண்டு ரக்அத்கள் தொழவேண்டும் என்ற பாடத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

பெருநாள் தொழுகை கடமையாக இருப்பதினாலேயே அதை தவற விட்டவர்கள் இரண்டு ரக்அத்துகள் தொழவேண்டும் என்று வந்துள்ளது.

குர்பானியின் சட்டங்கள்

குர்பானியின் பிண்ணனி

رَبِّ فَبَشَّرۡنَٰهُ هَبۡ لِي مِنَ ٱلصَّٰلِحِينَ ١٠٠ بِغُلَٰمٍ حَلِيمٖ ١٠١ فَلَمَّا
بَلَغَ مَعَهُ ٱلسَّعۡيَ قَالَ يَٰبُنَيَّ إِنِّيٓ أَرَىٰ فِي ٱلۡمَنَامِ أَنِّيٓ أَذۡبَحُكَ فَٱنظُرۡ مَاذَا
تَرَىٰۚ قَالَ يَٰٓأَبَتِ ٱفۡعَلۡ مَا تُؤۡمَرُۖ سَتَجِدُنِيٓ إِن شَآءَ ٱللَّهُ مِنَ
ٱلصَّٰبِرِينَ ١٠٢ فَلَمَّآ أَسۡلَمَا وَتَلَّهُۥ لِلۡجَبِينِ ١٠٣ وَنَٰدَيۡنَٰهُ أَن
يَٰٓإِبۡرَٰهِيمُ ١٠٤ قَدۡ صَدَّقۡتَ ٱلرُّءۡيَآۚ إِنَّا كَذَٰلِكَ نَجۡزِي ٱلۡمُحۡسِنِينَ
١٠٥ إِنَّ هَٰذَا لَهُوَ ٱلۡبَلَٰٓؤُاْ ٱلۡمُبِينُ ١٠٦ وَفَدَيۡنَٰهُ بِذِبۡحٍ عَظِيمٖ
١٠٧ وَتَرَكۡنَا عَلَيۡهِ فِي ٱلۡأٓخِرِينَ ١٠٨

என் இரட்சகனே நல்லோர்களில் (ஒருவரை) நீ எனக்கு(ச் சந்ததியாகத்) தந்தருள் புரிவாயாக! (என்றார்). ஆதலால், மிகுந்த சகிப்புத் தன்மையுடைய (இஸ்மாயீல் எனும்) மகனைக் கொண்டு அவருக்கு நன்மாராயம் கூறினோம். எனவே (இஸ்மாயீல்) அவருடன் சேர்ந்து உழைக்கக்கூடிய பருவத்தை அவர் அடைந்த பொழுது, அவர் (தன் மகனிடம்) ‘என் அருமை மகனே! நிச்சயமாக நான், உன்னை அறு(த்து)ப்

ப(லியிடுவ)தாக, நிச்சயமாக நான் கனவில் கண்டேன்: (இதைப் பற்றி) நீ என்ன அபிப்பிராயப்படுகிறாய்?' என்று கேட்டார்: அ(தற்க)வர், 'என் தந்தையே! நீங்கள் ஏவப்பட்டபடியே செய்யுங்கள்: அல்லாஹ் நாடினால் என்னை நீங்கள் பொறுமையாளர்களில் உள்ளவனாகக் காண்பீர்கள்' என்று கூறினார். ஆகவே, அவ்விருவரும் (அல்லாஹ்வின் கட்டளைக்கு) முற்றிலும் கீழ்ப்படிந்து, (இப்றாஹீமாகிய: அவர், (இஸ்மாயீலாகிய) அவரை (அறுத்துப் பலியிட) முகங் குப்புறக்கிடத்தியபோது: (அச்சமயம்) நாம் அவரை 'இப்றாஹீமே!' என அழைத்தோம். 'நிச்சயமாக நீர் (உம்முடைய) கனவை உண்மையாக்கி வைத்துவிட்டீர். நிச்சயமாக, நன்மை செய்கிறவர்களுக்கு நாம் இவ்வாறே கூலி கொடுப்போம். 'நிச்சயமாக இது இதுவே தெளிவான பெரும் சோதனையாகும் (என்றும் கூறினோம்). மேலும், (அவருக்கு பதிலாக) ஒரு மகத்தான பலியைக் கொண்டு அவரைப் பகரமாக்கினோம். இன்னும் அவருக்காக (அவரின் கீர்த்தியைப்) பின்னுள்ளோர்களில் (நிலைத்திருக்க) விட்டுவைத்தோம். (37:100–108)

அல்லாஹ்' இப்றாஹீம் عليه السلام அவர்களின் இந்த தியாகத்தை நினைவு கூறும் வண்ணம், பின்வருபவர்களுக்கு ஹஜ்ஜுப் பெருநாளில் கால்நடைகளை அறுத்து பலியிட வேண்டுமென கூறுகிறான்.

குர்பானி கொடுப்பது வணக்கமாகும்

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ ٱلْعَٰلَمِينَ ﴿١٦٢﴾

நிச்சயமாக என்னுடைய தொழுகையும், என்னுடைய அறுப்பு (குர்பானியு)ம், என் வாழ்வும், என் மரணமும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரித்தானவை யாகும்', என்று (நபியே!) நீர் கூறுவீராக!

عن عَامِرُ بْنُ وَاثِلَةَ قَالَ كُنْتُ عِنْدَ عَلِيِّ بْنِ أَبِى طَالِبٍ فَأَتَاهُ رَجُلٌ فَقَالَ مَا كَانَ النَّبِىُّ صلى الله عليه وسلم يُسِرُّ إِلَيْكَ قَالَ فَغَضِبَ وَقَالَ مَا كَانَ النَّبِىُّ صلى الله عليه وسلم يُسِرُّ إِلَىَّ شَيْئًا يَكْتُمُهُ النَّاسَ غَيْرَ أَنَّهُ قَدْ حَدَّثَنِى بِكَلِمَاتٍ أَرْبَعٍ. قَالَ فَقَالَ مَا هُنَّ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ قَالَ قَالَ لَعَنَ اللَّهُ مَنْ لَعَنَ وَالِدَهُ وَلَعَنَ اللَّهُ مَنْ ذَبَحَ لِغَيْرِ اللَّهِ وَلَعَنَ اللَّهُ مَنْ آوَى مُحْدِثًا وَلَعَنَ اللَّهُ مَنْ غَيَّرَ مَنَارَ الأَرْضِ (رواه مسلم 5239)

நான் (கலீஃபா) அலி பின் அபீதாலிப் رضي الله عنه அவர்களுடன் இருந்த போது அவர்களிடம் ஒரு

மனிதர் வந்து, உங்களிடம் நபி ﷺ அவர்கள் இரகசியமாக ஏதேனும் கூறினார்களா? எனக் கேட்டார். இதைக் கேட்டு அலி ؓ அவர்கள் கோபமுற்றார்கள். மேலும் நபி ﷺ அவர்கள் மக்களிடம் மூடிமறைக்கும் விதமாக எதையும் என்னிடம் இரகசியமாகக் கூறவில்லை. எனினும், நான்கு செய்திகளை என்னிடம் கூறினார்கள். 1. தனது தந்தையை சபித்தவனை அல்லாஹ் சபிக்கிறான். 2. அல்லாஹ் அல்லாத மற்றவர் பெயரில் (கால்நடைகளை) அறுத்தவனை அல்லாஹ் சபிக்கிறான். 3. (மார்க்கத்தின் பெயரால்) புதியவைகளை உருவாக்கியனுக்கு அடைக்கலம் அளித்தவனை அல்லாஹ் சபிக்கின்றான். 4. பூமியின் (எல்லைக்கல், மைல் கல், வரப்பு உள்ளிட்ட) அடையாளங்களை மாற்றியமை(த்துப் பிறர் நிலத்தை அபகரி)ப்பவனை அல்லாஹ் சபிக்கிறான் என்று கூறினார்கள். (அறிவிப்பாளர்: ஆமிர் பின் வாஸிலா ؓ, நூல்: முஸ்லிம் 4001)

குர்பானியின் நோக்கம்

لَن يَنَالَ ٱللَّهَ لُحُومُهَا وَلَا دِمَآؤُهَا وَلَٰكِن يَنَالُهُ ٱلتَّقْوَىٰ مِنكُمْ ۚ كَذَٰلِكَ سَخَّرَهَا لَكُمْ لِتُكَبِّرُواْ ٱللَّهَ عَلَىٰ مَا هَدَىٰكُمْ ۗ وَبَشِّرِ ٱلْمُحْسِنِينَ ﴿٣٧﴾

(இவ்வாறு குர்பானி செய்யப்பட்ட) அவற்றின் மாமிசங்களோ அல்லது அவற்றின் இரத்தங் களோ அல்லாஹ்வை ஒருபோதும் அடைந்து விடுவதில்லை: எனினும் உங்களிலுள்ள பயபக்தி தான் அவனை அடையும்: உங்களை அவன் நேர்வழியில் செலுத்தியதற்காக (தக்பீர் கூறி) அல்லாஹ்வை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காக, இவ்வாறு அவைகளை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான்: மேலும், (நபியே!) நன்மை செய்-வோருக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக! (22:37)

குர்பானியை பெருமைக்கும் புகழுக்கும் செய்யாமல் இறையச்சத்தினை பெறுவதற்காகவே செய்ய வேண்டும்.

குர்பானி கொடுப்பது கடமையா, கடமையில்லையா என்பதில் இருவிதமான கருத்துகளை கொள்வதற்கும் ஆதாரம்

உள்ளது. அவற்றினை முதலில் காண்போம்.

1. குர்பானி கடமை என்பதற்கான ஆதாரங்கள்

فَصَلِّ لِرَبِّكَ وَٱنۡحَرۡ ٢

ஆகவே நீர் உமதிரட்சகனை தொழுது இன்னும் (குர்பானியும் கொடுத்து அதை) அறுப்பீராக! (108-2)

- அல்லாஹ் நபி ﷺ அவர்களுக்கு குர்பானி கொடுக்க கட்டளையிடுகிறான். இந்த கட்டளை நபி ﷺ அவர்களுக்கு மாத்திரம் உரியது இல்லை. அவர்களின் உம்மத்தவர்களும் இந்த கட்டளையில் அடங்குவர்.

عَنْ أَبِى هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ « مَنْ كَانَ لَهُ سَعَةٌ وَلَمْ يُضَحِّ فَلاَ يَقْرَبَنَّ مُصَلاَّنَا(رواه ابن ماجه)

- யார் வசதி பெற்று குர்பானி தரவில்லையோ, அவர் எமது முஸல்லாவை (பெருநாள் திடலை) நெருங்க வேண்டாம். என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்:

அபூ ஹுரைரா ﷺ நூல்: இப்னு மாஜா 3242 - ஸஹீஹ்)

பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் பெருநாள் தொழுகை கடமையானது என்பதினை அறியலாம். குர்பானி செய்யாதவர், இத்தகைய கடமையான தொழுகையில் பங்கு கொள்ளக் கூடாது என்பதிலிருந்து குர்பானி கடமையானது என்பதினை அறியலாம்.

عَنْ جُنْدَبِ بْنِ سُفْيَانَ الْبَجَلِيِّ قَالَ ضَحَّيْنَا مَعَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم أُضْحِيَّةً ذَاتَ يَوْمٍ فَإِذَا أُنَاسٌ قَدْ ذَبَحُوا ضَحَايَاهُمْ قَبْلَ الصَّلاَةِ فَلَمَّا انْصَرَفَ رَآهُمُ النَّبِيُّ صلى الله عليه وسلم أَنَّهُمْ قَدْ ذَبَحُوا قَبْلَ الصَّلاَةِ فَقَالَ « مَنْ ذَبَحَ قَبْلَ الصَّلاَةِ فَلْيَذْبَحْ مَكَانَهَا أُخْرَى ، وَمَنْ كَانَ لَمْ يَذْبَحْ حَتَّى صَلَّيْنَا فَلْيَذْبَحْ عَلَى اسْمِ اللَّهِ » . (رواه البخاري)

- ஒரு (ஹஜ்ஜுப் பெரு) நாளின்போது (தொழுகை முடிந்த பிறகு) நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுடன் தியாகப் பிராணிகளை அறுத்துக் குர்பானி கொடுத்தோம். (அன்று) சிலர் தங்களுடைய தியாகப் பிராணியை தொழுகைக்கு முன்பாகவே அறுத்துவிட்டனர். (தொழுகை யிலிருந்து) திரும்பிய நபி ﷺ அவர்கள்

தொழுகைக்கு முன்னதாகவே அவர்கள் குர்பானி கொடுத்துவிட்டிருப்பதைக் கண்ட போது யார் தொழுகைக்கு முன்அறுத்து விட்டாரோ அவர் அதற்கு பதிலாக வேறொன்றை அறுக்கட்டும். யார் தொழும் வரை அறுத்திருக்கவில்லையோ அவர் அல்லாஹ்வின் பெயர் சொல்லி அறுக்கட்டும் என்று கூறினார்கள். (அறிவிப்பாளர் : ஜுன்தப் பின் சுஃப்யான் அல்பஜலீ ؓ, **நூல்: புகாரி 5500)**

عَنِ الْبَرَاءِ بْنِ عَازِبٍ – رضى الله عنهما – قَالَ خَطَبَنَا النَّبِىُّ – صلى الله عليه وسلم – يَوْمَ الأَضْحَى بَعْدَ الصَّلاَةِ فَقَالَ « مَنْ صَلَّى صَلاَتَنَا وَنَسَكَ نُسُكَنَا فَقَدْ أَصَابَ النُّسُكَ ، وَمَنْ نَسَكَ قَبْلَ الصَّلاَةِ فَإِنَّهُ قَبْلَ الصَّلاَةِ ، وَلاَ نُسُكَ لَهُ » . فَقَالَ أَبُو بُرْدَةَ بْنُ نِيَارٍ خَالُ الْبَرَاءِ يَا رَسُولَ اللَّهِ ، فَإِنِّى نَسَكْتُ شَاتِى قَبْلَ الصَّلاَةِ ، وَعَرَفْتُ أَنَّ الْيَوْمَ يَوْمُ أَكْلٍ وَشُرْبٍ ، وَأَحْبَبْتُ أَنْ تَكُونَ شَاتِى أَوَّلَ مَا يُذْبَحُ فِى بَيْتِى ، فَذَبَحْتُ شَاتِى وَتَغَدَّيْتُ قَبْلَ أَنْ آتِىَ الصَّلاَةَ . قَالَ « شَاتُكَ شَاةُ لَحْمٍ » . قَالَ يَا رَسُولَ اللَّهِ ، فَإِنَّ عِنْدَنَا عَنَاقًا لَنَا جَذَعَةً هِىَ أَحَبُّ إِلَىَّ مِنْ شَاتَيْنِ ، أَفَتَجْزِى عَنِّى قَالَ « نَعَمْ ، وَلَنْ تَجْزِىَ عَنْ أَحَدٍ بَعْدَكَ »(رواه البخاري)

- நபி ﷺ அவர்கள் ஈதுல் அள்ஹா பெருநாளன்று எஙகளுக்கு தொழுகைக்குப்

பின் உறையாற்றினார்கள். அவர்கள் (தமது உரையில்) “யார் நமது தொழுகையைத் தொழுது (அதன்பிறகு) நமது குர்பானியைப் போன்று குர்பானி கொடுக்கிறாரோ அவரே (குர்பானி) வழிபாட்டை (முறைப்படி) முடித்தவராவார். யார் (பெருநாள்) தொழுகைக்கு முன்பே குர்பானி கொடுத்துவிட்டாரோ அது தொழுகைக்கு முன்புள்ளதாகும். அவருடைய குர்பானி வழிபாடு நிறைவேறாது. ” என்று கூறினார்கள். அப்போது என் தாய்மாமன் அபூபுர்தா பின் நியார் ﵁ அவர்கள், “அல்லாஹ்வின் தூதரே! நான் இன்றைய தினம் உண்பதற்கும் குடிப்பதற்குமுரிய நாள் என்று அறிந்தேன். எனது வீட்டில் அறுக்கப்படும் ஆடுகளில் எனது ஆடே முதல் ஆடாக இருக்க வேண்டும் எனவும் நான் விரும்பினேன் ஆகவே (பெருநாள்) தொழுகைக்கு வருவதற்கு முன்பே நான் அறுத்துவிட்டேன். காலைச் சிற்றுண்டி யாகவும் (அதை) உட்கொண்டும்விட்டேன் ”

என்றார். அதற்கு நபி ﷺ அவர்கள், (நீர் அறுத்த) உம்முடைய ஆடு இறைச்சி(க்காக அறுக்கப்பட்ட) ஆடு என்றே கருதப்படும் , என்று கூறினார்கள். அதற்கு அபூபுர்தா ؓ அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! எங்களிடம் ஒரு வயதுடைய பெட்டை வெள்ளாடு ஒன்று உள்ளது. அது (கொழுத்திருப்பதால்) இரண்டு ஆடுகளை விட எனக்கு மிகவும் விருப்பமானதாகும். அ(தை நான் அறுப்ப)து எனக்குப் போதுமாகுமா" என்று கேட்டார். அதற்கு நபி ﷺ அவர்கள், "ஆம் (உமக்கு மட்டும் அதுபோதுமாகும்.) உமக்குப் பிறகு வேறெ-வருக்கும் அது போதுமாகாது " என்று கூறினார்கள். **(அறிவிப்பாளர் : பராஉ பின் ஆஸிப் ؓ, நூல்: புகாரி 955)**

குர்பானி கொடுப்பது கடமை என்பதினால் தான் நபி ﷺ அவர்கள் தொழுகைக்கு முன்னதாகவே குர்பானி கொடுத்தவர்களை தொழுகை முடிந்ததும் மீண்டும் குர்பானி கொடுக்கும்படி கட்டளை யிட்டார்கள்.

2. குர்பானி கடமையில்லை என்பதற்கான ஆதாரங்கள்.

عَنْ أُمِّ سَلَمَةَ أَنَّ النَّبِىَّ صلى الله عليه وسلم قَالَ « إِذَا رَأَيْتُمْ هِلاَلَ ذِى الْحِجَّةِ وَأَرَادَ أَحَدُكُمْ أَنْ يُضَحِّىَ فَلْيُمْسِكْ عَنْ شَعْرِهِ وَأَظْفَارِهِ (رواه مسلم)

- **உங்களில் ஒருவர் குர்பானி கொடுக்க விரும்பி** துல்ஹஜ் (முதல்) பிறையை கண்டால் குர்பானியை நிறைவேற்றும் வரை (அவர்) தனது முடி, நகம் ஆகியவற்றை நீக்க வேண்டாம் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: உம்மு ஸல்மா ؓ, நூல்: முஸ்லிம் 5234)

யார் குர்பானி கொடுக்க **விரும்புகிறாரோ** என்று கூறுவதின் மூலம் குர்பானி கொடுப்பது கட்டாய கடமையில்லை என்பதினை அறியலாம். ஏனெனில் ஒரு காரியத்தை குறிப்பிட்டு விரும்பியவர் செய்து கொள்ளட்டும் என்று கூறினால் அந்த செயல் கடமை ஆகாது.

وروي عن أبي بكر وعمر (أنهما كانا لا يضحيان عن أهلهما مخافة أن يرى ذلك واجبا)(أخرجه البيهقي 295/9)

- குர்பானி கொடுப்பது கடமையாக கருதப்பட்டு விடும் என அஞ்சி, அபூபக்கர் ﵁ மற்றும் உமர் ﵁ அவர்கள் தங்களது குடும்பத்தின் சார்பாக (சில ஹஜ்ஜிப் பெரு-நாட்களில்) குர்பானி கொடுக்காமல் இருந்து-ள்ளார்கள். (நூல்: பைஹகீ 9/295 - ஸஹீஹ்)

இரு விதமான ஆதாரங்களையும் பரிசிலித்து பெரும்பான்மையான மார்க்க அறிஞர்கள் கூறுவது என்னவெனில், குர்பானி கொடுப்பது கடமை இல்லையென்றிருந்தாலும் மிகவும் வலியுறுத்திச் சொல்லப்பட்ட ஒரு சுன்னத்தாகும். ஆகவே வசதிப்படைத்தவர்கள் இந்த சுன்னத்தை அலட்சியப்படுத்தாமல் நிறைவேற்றிட வேண்டும்.

மரணித்தவர் சார்பாக குர்பானி

அலி ﵁ இரண்டு ஆடுகளில் ஒன்றை தனக்காகவும் மற்றொன்றை நபி ﷺ அவர்களுக்காகவும் அறுத்ததார்கள் (அபூதாவூத்) இந்த ஹதீஸ் பலவீனமானதாகும். இதில் 1. ஷரீக் பின் அப்துல்லாஹ் 2. ஹன்ஷ் பின் அல்முஃதமிர் 3. அபுல் ஹஷனா ஆகிய மூன்று பலவீனமான அறிவிப்பாளர்கள் சேர்ந்து இடம்

பெறுவதால், இது மிக பலவீனமான நிலையை பெறுகிறது ஆகவே, இதனை ஆதாரமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

நபி ﷺ அவர்கள் தனது வாழ்நாளில் இறந்துவிட்ட தனது மகன் இப்ராஹீமுக்காவோ அல்லது மனைவி அன்னை கதீஜா ؓ அவர்களின் சார்பாகவோ குர்பானி கொடுத்த தில்லை. இன்னும் மரணித்தவர்களுக்கு எந்த வகையில் நன்மைகள் சென்றடையும் என்பதை-யும் நபி ﷺ அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

عَنْ أَبِى هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ « إِذَا مَاتَ الإِنْسَانُ انْقَطَعَ عَنْهُ عَمَلُهُ إِلاَّ مِنْ ثَلاَثَةٍ إِلاَّ مِنْ صَدَقَةٍ جَارِيَةٍ أَوْ عِلْمٍ يُنْتَفَعُ بِهِ أَوْ وَلَدٍ صَالِحٍ يَدْعُو لَهُ ».(رواه مسلم)

மனிதன் மரணித்தவுடன் மூன்று காரியங்களைத் தவிர மற்ற எல்லா தொடர்புகளும் துண்டிக்கப் பட்டுவிடுகின்றன. 1. நிரந்தர தர்மம் 2. பயன் தரும் கல்வி 3. தன் தந்தைக்காக துஆ செய்யும் நல்ல மகன். என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: முஸ்லிம் 4310)

குர்பானி கொடுப்பவர் செய்யக் கூடாதவை

عَنْ أُمِّ سَلَمَةَ أَنَّ النَّبِىَّ صلى الله عليه وسلم قَالَ « إِذَا رَأَيْتُمْ هِلاَلَ ذِى الْحِجَّةِ وَأَرَادَ أَحَدُكُمْ أَنْ يُضَحِّىَ فَلْيُمْسِكْ عَنْ شَعْرِهِ وَأَظْفَارِهِ (رواه مسلم)

உங்களில் ஒருவர் குர்பானி கொடுக்க விரும்பி துல்ஹஜ் (முதல்) பிறையை கண்டால், குர்பானியை நிறைவேற்றும் வரை (அவர்) தனது முடி, நகம் ஆகியவற்றை நீக்க வேண்டாம் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: உம்மு ஸலமா رضي الله عنها, நூல்: முஸலிம் 5234)

குறிப்பு: ஒருவர் துல்ஹஜ் முதல் பத்து நாட்களின் இடையில் குர்பானிக்கான நிய்யத் (எண்ணம்) செய்திருந்தால், அவர் அந்த நேரத்திலிருந்து குர்பானியை நிறைவேற்றும் வரை தனது முடி, நகம் ஆகியவற்றை நீக்க கூடாது.
குர்பானி கொடுப்பவர் மட்டுமே தனது முடி, நகம் ஆகியவற்றை நீக்க கூடாது. அவரின் குடும்பத்தினர் இதனை கடைபிடிக்க வேண்டிய அவசியமில்லை. குடும்பத்தார்கள் அனைவரும் இதனை கடைபிடிக்க வேண்டுமென்றிருந்தால்,

நபி ﷺ தனது மனைவிமார்களுக்கு கட்டளையிட்டிருப்பார்கள். ஆனால் அவ்வாறு கட்டளையிட்டதாக எந்தவொரு தகவலுமில்லை.

குர்பானி பிராணிகள்

وَلِكُلِّ أُمَّةٍ جَعَلْنَا مَنسَكًا لِّيَذْكُرُوا۟ ٱسْمَ ٱللَّهِ عَلَىٰ مَا رَزَقَهُم مِّنۢ بَهِيمَةِ ٱلْأَنْعَـٰمِ

(ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால்நடைப் பிராணிகளிலிருந்து அவன் அவர்களுக்கு கொடுத்திருக்கின்றவற்றின் மீது அல்லாஹ்வின் பெயரை அவர்கள் கூறுவதற்காக ஒவ்வொரு சமூகத்தாருக்கும் குர்பானி செய்வதை நாம் ஏற்படுத்திருந்தோம். (22:34)

இந்த வசனத்திலுள்ள அல்அன்ஆம் (الأنعام) என்ற வாசகத்திற்கு அரபி அகராதியில் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய மூன்று பிராணிகளை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

நபி ﷺ அவர்கள் (ஆடு, மாடு, ஒட்டகம்) இம்மூன்று பிராணிகளை மட்டுமே குர்பானி கொடுத்து வந்ததாக ஹதிஸ்களில் காண முடிகிறது. ஆகவே இம்மூன்று பிராணிகளை

மட்டுமே குர்பானி கொடுக்க வேண்டும் மற்ற பிராணிகளை குர்பானி கொடுக்க கூடாது.

குறிப்பு: நபி ﷺ அவர்களின் காலத்தில் எருமை இனத்தை குர்பானியாக கொடுக்கப்பட்டதில்லை. ஆகவே தான் அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. எனவே பேணுதலின் அடிப்படையில் எருமை இனத்தை தவிர்த்து ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய மூன்றை மட்டுமே குர்பானி கொடுப்பது சிறந்ததாகும்.

பெரும்பான்மையான முஸ்லிம்கள், பெண் பிராணிகளை குர்பானி கொடுப்பது தடையென நினைக்கின்றனர். ஆனால் அல்லாஹ் பலியிடப்பட வேண்டிய பிராணிகளை பற்றி கூறும் போது பெண்ணினத்தையும் சேர்த்தே குறிப்பிடுகிறான். (பார்க்க: அல்குர்ஆன், 6:143)

قَالَ يَا رَسُولَ اللَّهِ، فَإِنَّ عِنْدَنَا عَنَاقًا لَنَا جَذَعَةً هِيَ أَحَبُّ إِلَيَّ مِنْ شَاتَيْنِ، أَفَتَجْزِى عَنِّى قَالَ نَعَمْ ، وَلَنْ تَجْزِىَ عَنْ أَحَدٍ بَعْدَكَ (رواه البخاري)

அல்லாஹ்வின் தூதரே! “எங்களிடம் **ஒரு வயதுடைய பெட்டை வெள்ளாடு** ஒன்று உள்ளது. அது (கொழுத்திருப்பதால்) இரண்டு ஆடுகளை விட எனக்கு மிகவும் விருப்பமானதாகும். அ(தை

நான் அறுப்ப)து எனக்குப் போதுமாகுமா ” என்று கேட்டார். அதற்கு நபி ﷺ அவர்கள் ஆம் (உமக்கு மட்டும் அதுபோதுமாகும்.) உமக்குப் பிறகு வேறெவருக்கும் அது போதுமாகாது ” என்று கூறினார்கள். (புகாரி 955)

பிராணிகளின் வயது வரம்பு

عَنْ جَابِرٍ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم « لاَ تَذْبَحُوا إِلاَّ مُسِنَّةً إِلاَّ أَنْ يَعْسُرَ عَلَيْكُمْ فَتَذْبَحُوا جَذَعَةً مِنَ الضَّأْنِ (رواه مسلم)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், முஸின்னா வைத்தவர வேறு எதையும் அறுக்காதீர்கள். அது சிரமமாக இருந்தால், ஆறுமாதத்தை பூர்த்தி செய்த செம்மறி ஆட்டை அறுங்கள். (அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்துல்லாஹ் رضي الله عنه, நூல்: முஸ்லிம் 5194)

ஆட்டில் ஒரு வருடத்தை மாட்டில் இரண்டு வருடத்தை பூர்த்தி செய்தவற்றையும், ஒட்டகத்-தில் ஐந்து வருடத்தை பூர்த்தி செய்தவற்றையும் குறிப்பிட முஸின்னா (مسنة) என்ற வார்த்தை பயன்படுத்தபடும்.

நபி ﷺ அவர்கள் முஸின்னாவை குர்பானி கொடுக்கவே வலியுறுத்தியுள்ளார்கள். வசதி குறைவின் காரணமாக ஒருவருக்கு முஸின்னாவை குர்பானி கொடுப்பதற்கு சிரமமாக இருந்தால் அவர் ஜத்அ (جذعة) ஆறுமாதத்தை பூர்த்தி செய்த செம்மறியாட்டை அறுப்பதற்கு அனுமதியுள்ளது.

குறிப்பு: இந்த விதிவிலக்கு செம்மறியாட்டிற்கு மட்டுமே மற்றவற்றிற்கு இல்லை.

பிராணிகளின் தன்மைகள்

குர்பானி பிராணிகள் ஆரோக்கியமானதாகவும், எந்த குறையும் இல்லாதவைகளாகவும் இருத்தல் வேண்டும்.

عن البراء بن عازب عن رسول الله أَرْبَعٌ لاَ تَجُوزُ فِى الأَضَاحِى الْعَوْرَاءُ بَيِّنٌ عَوَرُهَا وَالْمَرِيضَةُ بَيِّنٌ مَرَضُهَا وَالْعَرْجَاءُ بَيِّنٌ ظَلْعُهَا وَالْكَسِيرُ الَّتِى لاَ تَنْقَى (رواه ابي داؤد)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், 1. வெளிப் படையாக தெரியும் குருடு 2. வெளிப்படையாக தெரியும் நோய் 3. வெளிப்படையாக தெரியும் நொண்டி 4. எலும்பில் மஜ்ஜை இல்லாத மெலிவு ஆகிய குறைபாடுகளுடைய பிராணிகளை

குர்பானி கொடுக்கக் கூடாது. (பராஉ பின் ஆஸிப் ﵁, நூல்: அபூதாவூத் 2804- ஸஹீஹ்)

இந்த ஹதீஸிலுள்ள **தெளிவாக தெரியக்கூடிய** என்ற வாசகம் குறை சிறியதாகவோ மறைமுகமாகவோ இருந்தால் அந்த பிராணிகளை குர்பானி கொடுப்பதில் குற்றமில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது.

ஒரு குடும்பத்திற்கு ஓர் ஆடு போதுமானதாகும்

عن عَطَاءَ بْنَ يَسَارٍ يَقُولُ سَأَلْتُ أَبَا أَيُّوبَ الأَنْصَارِيَّ كَيْفَ كَانَتِ الضَّحَايَا عَلَى عَهْدِ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم فَقَالَ كَانَ الرَّجُلُ يُضَحِّى بِالشَّاةِ عَنْهُ وَعَنْ أَهْلِ بَيْتِهِ فَيَأْكُلُونَ وَيُطْعِمُونَ (رواه الترمزي)–1587

நபி ﷺ அவர்களின் காலத்தில் எவ்வாறு குர்பானி கொடுக்கப்பட்டு வந்தது என்று அபூ அய்யூப் ﵁ அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கு அவர்கள், ஒருவர் தமக்கும் தமது குடும்பத்திற்கும் சேர்த்து ஒரு ஆட்டையே குர்பானி கொடுப்பார் என்று கூறினார்கள். (அறிவிப்பாளர்: அஃதா பின் யஸார் (رحمه الله), நூல்: திர்மிதி 1587 - ஸஹீஹ்)

குறிப்பு: ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட ஆடுகளை குர்பானி கொடுப்பதற்கும் அனுமதியுள்ளது.

கூட்டு குர்பானி

➢ **மாட்டில் 7 பேர் கூட்டு சேரலாம்**

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ قَالَ نَحَرْنَا مَعَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم عَامَ الْحُدَيْبِيَةِ الْبَدَنَةَ عَنْ سَبْعَةٍ وَالْبَقَرَةَ عَنْ سَبْعَةٍ (رواه مسلم)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுடன் நாங்கள் ஹுதைபிய்யா ஆண்டில் ஏழுபேர் சேர்ந்து ஓர் ஒட்டகத்தையும், ஏழுபேர் சேர்ந்து ஒரு மாட்டையும், குர்பானி கொடுத்தோம். (அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் ؓ, நூல்: முஸ்லிம் 3246)

➢ **ஒட்டகத்தில் 10 பேர் கூட்டு சேரலாம்**

عن ابن عباس قال كنا مع النبي صلى الله عليه وسلم في سفر فحضر الأضحى فاشتركنا في البقرة سبعة وفي الجزور عشرة (رواه الترمزي)

நாங்கள் நபி ﷺ அவர்களுடன் ஒரு பிரயாணத்தில் இருந்த போது ஹஜ்ஜிப் பெருநாள் வந்தது. ஒரு மாட்டில் ஏழு பேரும் ஒரு ஒட்டகத்தில் 10 பேரும் கூட்டுச் சேர்ந்தோம். (அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ؓ, நூல்: திர்மிதி 915 – ஸஹீஹ்)

குர்பானி பிராணிகளை எப்போது அறுக்க வேண்டும்.

பெருநாள் தொழுகைக்கு பிறகே பிராணிகளை அறுக்க வேண்டும்.

عَنِ الْبَرَاءِ رضى الله عنه قَالَ قَالَ النَّبِىُّ صلى الله عليه وسلم « إِنَّ أَوَّلَ مَا نَبْدَأُ بِهِ فِى يَوْمِنَا هَذَا أَنْ نُصَلِّىَ ثُمَّ نَرْجِعَ فَنَنْحَرَ ، مَنْ فَعَلَهُ فَقَدْ أَصَابَ سُنَّتَنَا وَمَنْ ذَبَحَ قَبْلُ فَإِنَّمَا هُوَ لَحْمٌ قَدَّمَهُ لأَهْلِهِ ، لَيْسَ مِنَ النُّسُكِ فِى شَىْءٍ. فَقَامَ أَبُو بُرْدَةَ بْنُ نِيَارٍ وَقَدْ ذَبَحَ فَقَالَ إِنَّ عِنْدِى جَذَعَةً . فَقَالَ « اذْبَحْهَا وَلَنْ تَجْزِىَ عَنْ أَحَدٍ بَعْدَكَ (رواه البخاري)

(ஈதுல் அள்ஹா பெருநாள் உரையில்) நபி ﷺ அவர்கள், இன்றைய தினம் நாம் முதலாவதாகச் செய்ய வேண்டியது யாதெனில். முதலில் நாம் (பெருநாள் தொழுகை) தொழுவோம் பிறகு தொழுகையிலிருந்து திரும்பிச் சென்று குர்பானிப் பிராணிகளை அறுப்போம். இதை யார் செய்கிறாரோ அவர் நமது வழியைப் பின் பற்றியவர் ஆவார். (பெருநாள் தொழுகைக்கு) முன்பே யார் (குர்பானிப் பிராணியை) அறுக்கிறாரோ அவர் தம் குடும்பத்தாருக்காக முன் கூட்டியே தயார் செய்த (சாதாரண) இறைச்சியாகவே அது அமையும், அது (குர்பானி)

வழிபாட்டில் எதிலும் சேராது என்று சொன்னார்கள். உடனே (தொழுகைக்கு முன்பு அறுத்து விட்டிருந்த) அபூபுர்தா பின் நியார் ﷺ அவர்கள் எழுந்து , (அல்லாவின் தூதரே) என்னிடம் ஒரு வயதுடைய (வெள்ளாட்டு) குட்டி ஒன்று இருக்கிறது. என்று சொன்னார்கள். நபி ﷺ அவர்கள்அதை அறுத்திடுவீராக! உமக்குப் பிறகு வேறெவருக்குமத் அது செல்லாது என்று சொன்னார்கள். பராஉ ﷺ அவர்களே அறிவிக்கிறார்கள். **(புகாரி 5545)**

عَنْ جُنْدَبٍ قَالَ صَلَّى النَّبِيُّ صلى الله عليه وسلم يَوْمَ النَّحْرِ ثُمَّ خَطَبَ ثُمَّ ذَبَحَ فَقَالَ « مَنْ ذَبَحَ قَبْلَ أَنْ يُصَلِّىَ فَلْيَذْبَحْ أُخْرَى مَكَانَهَا ، وَمَنْ لَمْ يَذْبَحْ فَلْيَذْبَحْ بِاسْمِ اللَّهِ » (رواه البخاري)

நான் நபி ﷺ அவர்களுடன் நஹ்ருடைய (துல்ஹஜ் 10ஆவது) நாளன்று இருந்தேன். அப்போது அவர்கள், (பெருநாள்) தொழுவதற்கு முன்பே (குர்பானிப் பிராணியை) அறுத்துவிட்டவர் அதனிடத்தில் (அதற்கு பதிலாக) வேறொன்றை (தொழுகைக்குப் பின்) அறுக்கட்டும் அறுக்காமல் இருப்பவர் (தொழுகை முடிந்தவுடன்) அறுக்கட்டும் என்று சொன்னார்கள்.
(அறிவிப்பாளர்: ஜுன்தப் பின் சுஃப்யான் அல்பஜலீ ﷺ , நூல்: புகாரி 5562)

குர்பானி எத்தனை நாட்கள் வரையில் கொடுக்கலாம்

ஹஜ்ஜிப் பெருநாள் தொழுகையை நிறைவேற்றி முடிந்தது முதல் துல்ஹஜ் பிறை 13 வரை குர்பானி கொடுக்கலாம்.

عَنْ جُبَيْرِ بْنِ مُطْعِمٍ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ كُلُّ أَيَّامِ التَّشْرِيقِ ذَبْحٌ (أحمد)

தஷ்ரீகுடைய நாட்கள் அனைத்தும் அறுப்பதற்குரியதாகும் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: ஜுபைர் பின் முத்யிம் ؓ, நூல்: அஹ்மத் 16752 – ஸஹீஹ்)

(தஷ்ரீக் நாட்கள் என்பது துல்ஹஜ் 11,12,13 ஆகும்)

குர்பானி பிராணிகளை எங்கு அறுக்க வேண்டும்

عَنْ نَافِعٍ أَنَّ ابْنَ عُمَرَ رضى الله عنهما أَخْبَرَهُ قَالَ كَانَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يَذْبَحُ وَيَنْحَرُ بِالْمُصَلَّى (رواه البخاري)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் (பெருநாள்) தொழும் திடலிலேயே குர்பானிப் பிராணிகளை

அறுப்பவர்களாக இருந்தார்கள். (அறிவிப்பாளர்: இப்னு உமர் ﵁, நூல்: புகாரி 5552)

விரும்பியவர்கள் வீட்டில் கொடுப்பதற்கும் அனுமதியுள்ளது.

عَنِ الْبَرَاءِ رضى الله عنه قَالَ قَالَ النَّبِىُّ صلى الله عليه وسلم – « إِنَّ أَوَّلَ مَا نَبْدَأُ بِهِ فِى يَوْمِنَا هَذَا أَنْ نُصَلِّىَ ثُمَّ نَرْجِعَ فَنَنْحَرَ ، مَنْ فَعَلَهُ فَقَدْ أَصَابَ سُنَّتَنَا ، وَمَنْ ذَبَحَ قَبْلُ فَإِنَّمَا هُوَ لَحْمٌ قَدَّمَهُ لأَهْلِهِ ، لَيْسَ مِنَ النُّسُكِ فِى شَىْءٍ (رواه البخاري)

(ஈதுல் அள்ஹா பெருநாள் உரையில்) நபி ﷺ அவர்கள், இன்றைய தினம் நாம் முதலாவதாகச் செய்ய வேண்டியது யாதெனில். முதலில் நாம் (பெருநாள் தொழுகை) தொழுவோம் , பிறகு தொழுகையிலிருந்து திரும்பிச் சென்று குர்பானிப்பிராணிகளை அறுப்போம். இதை யார் செய்கிறாரோ அவர் நமது வழியைப் பின்பற்றியவர் ஆவார். (பெருநாள் தொழுகைக்கு) முன்பே யார் (குர்பானிப் பிராணியை) அறுக்கிறாரோ அவர் தம் குடும்பத்தாருக்காக முன் கூட்டியே தயார் செய்த (சாதாரண) இறைச்சியாகவே அது அமையும், அது (குர்பானி) வழிபாட்டில் எதிலும் சேராது என்று சொன்னார்கள். (அறிவிப்பாளர்: பராஉ ﵁, நூல்: புகாரி 5545)

தொழுகையிலிருந்து திரும்பிச் சென்று குர்பானிப்பிராணிகளை அறுப்போம்.

திரும்பிச் சென்று என்ற வாசகம் வீடுகளுக்கு சென்று குர்பானி கொடுப்பதையே குறிக்கும்.

பிராணியை அறுக்கும் முறை

- **ஆடு மாடுகளை ஒரு பக்கமாக படுக்கவைத்து அறுக்க வேண்டும்.**

ஆடு மாடுகளை ஒரு பக்கமாக படுக்கவைத்து அவை எழாமல் இருப்பதற்கு, அவற்றின் பக்கவாட்டில் காலை வைத்து அறுக்க வேண்டும்.

عن أَنَسٌ رضى الله عنه أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم كَانَ يُضَحِّى بِكَبْشَيْنِ أَمْلَحَيْنِ أَقْرَنَيْنِ ، وَوَضَعَ رِجْلَهُ عَلَى صَفْحَتِهِمَا ، وَيَذْبَحُهُمَا بِيَدِهِ (رواه البخاري)

அவர்கள் கூறியதாவது: நபி ﷺ அவர்கள் கொம்பு உள்ள இரு கறுப்பு வெள்ளை செம்மறியாட்டுக் கடாக்களைக் குர்பானி கொடுத்து வந்தார்கள். அப்போது தமது காலை அவற்றின் பக்கவாட்டில் வைத்துக் கொண்டு தமது கரத்தால் அவற்றை அறுப்பார்கள். **(அறிவிப்பாளர்: அனஸ் ؓ, நூல்: புகாரி 5564)**

➢ ஒட்டகங்களை நிற்க வைத்து அறுக்க வேண்டும்.

عَنِ زِيَادِ بْنِ جُبَيْرٍ قَالَ رَأَيْتُ ابْنَ عُمَرَ رضى الله عنهما أَتَى عَلَى رَجُلٍ ، قَدْ أَنَاخَ بَدَنَتَهُ يَنْحَرُهَا، قَالَ ابْعَثْهَا قِيَامًا مُقَيَّدَةً، سُنَّةَ مُحَمَّدٍ صلى الله عليه وسلم (رواه البخاري)

இப்னு உமர் ﵁ அவர்கள் அறுப்பதற்காகத் தமது ஒட்டகத்தைப் படுக்க வைத்திருந்த ஒருவரிடம் வந்து ,அதைக் கட்டி நிற்க வைத்து அறுப்பீராக! அதுவே முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிமுறை! , என்று கூறியதை நான் பார்த்தேன்.
(அறிவிப்பாளர்: ஸியாத் பின் ஜு பைர் (رحمه الله), நூல்: புகாரி 1713)

குர்பானி பிராணியை தாமே அறுப்பது சுன்னத்தாகும்

عَنْ أَنَسٍ قَالَ ضَحَّى النَّبِىُّ صلى الله عليه وسلم بِكَبْشَيْنِ أَمْلَحَيْنِ فَرَأَيْتُهُ وَاضِعًا قَدَمَهُ عَلَى صِفَاحِهِمَا يُسَمِّى وَيُكَبِّرُ ، فَذَبَحَهُمَا بِيَدِهِ (رواه البخاري)

நபி ﷺ அவர்கள் இரண்டு கறுப்பு வெள்ளை செம்மறியாட்டுக் கடாக்களைக் குர்பானி கொடுத்தார்கள். அவர்கள் தமது பாதத்தை அவற்றின் பக்கவாட்டின் மீது வைத்துக்கொண்டு அல்லாஹ்வின் பெயர் கூறி , தக்பீர் (அல்லாஹு அக்பர்-அல்லாஹ் மிகப் பெரியவன் என்று)

சொல்லி அவற்றைத் தமது கையால் அறுத்ததை நான் பார்த்தேன். **(அறிவிப்பாளர்: அனஸ் ﵁, நூல்: புகாரி 5558)**

பிராணியை அறுப்பதற்கு முன்பு என்ன கூறவேண்டும்.

நபி ﷺ அவர்கள் (إني وجهت وجهي للذي) **இன்னீ வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதீ** என்ற துஆவை ஓதி குர்பானி கொடுத்ததாக அபூதாவூத், இப்னு மாஜா ஆகிய நூல்களில் ஒரு ஹதிஸ் இடம் பெறுகிறது. ஆனால் இந்த ஹதிஸ் பலஹீனமானதாகும். ஸஹீஹான ஹதீஸ்களில் நபி ﷺ அவர்கள் (بسم الله أكبر) **பிஸ்மில்லாஹி அல்லாஹுஅக்பர்** என்று கூறியதாக வந்துள்ளது.

عَنْ أَنَسٍ قَالَ ضَحَّى النَّبِيُّ صلى الله عليه وسلم بِكَبْشَيْنِ أَمْلَحَيْنِ أَقْرَنَيْنِ ذَبَحَهُمَا بِيَدِهِ وَسَمَّى وَكَبَّرَ وَوَضَعَ رِجْلَهُ عَلَى صِفَاحِهِمَا (رواه البخاري)

நபி ﷺ அவர்கள் கொம்பு உள்ள இரு கறுப்பு வெள்ளை செம்மறியாட்டுக் கடாக்களைக் குர்பானி கொடுத்தார்கள். அவ்விரண்டையும் தமது கரத்தால் அறுத்தார்கள். (அப்போது) அல்லாஹ்வின் பெயர் (பிஸ்மில்லாஹ்) கூறினார்கள். தக்பீரும் (அல்லாஹு அக்பர்)

சொன்னார்கள். மேலும் தமது காலை அவற்றின் பக்கவாட்டில் வைத்(துக்கொண்டு அறுத்)தார்கள். **(அறிவிப்பாளர்: அனஸ் ﷺ, நூல்:புகாரி 5565)**

முஸ்லிமில் உள்ள ஒரு அறிவிப்பில் நபி ﷺ அவர்கள் (بسم الله أكبر) **பிஸ்மில்லாஹி வல்லாஹு அக்பர்** என்று கூறியதாக வந்துள்ளது.

பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று கூறிவிட்டு, இதனை எனது சார்பாகவும், எனது குடும்பத்தினர் சார்பாகவும் ஏற்றுக் கொள்வாயாக என்று அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும்.

குறிப்பு: குர்பானி பிராணிகளை அறுக்கும் போது அவற்றினை துன்புறுத்தாமல் அறுக்க வேண்டும்.

நீங்கள் பிராணிகளை அறுத்தால் அழகிய முறையில் அறுங்கள். உங்களுடைய கத்தியை கூர்மையாக்கிக் கொள்ளுங்கள். அதன் மூலம் அறுக்கப்படும் பிராணிகளுக்கு நிம்மதியை அளியுங்கள் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: ஷத்தாத் பின் அவ்ஸ் ﷺ, நூல்: முஸ்லிம் 5167)

குர்பானியின் இறைச்சியை பங்கிடுதல்

குர்பானியின் இறைச்சியை மூன்று பங்காக பிரித்து பங்கிட வேண்டும் என்பதற்கு ஆதாரம் ஏதுமில்லை. அவற்றின் மாமிசத்தை தானும் உண்டு தனது உறவினர்கள் மற்றும் ஏழைகளுக்கு வழங்குவது சிறந்ததாகும்.

فَكُلُواْ مِنۡهَا وَأَطۡعِمُواْ ٱلۡبَآئِسَ ٱلۡفَقِيرَ ۝٢٨

அ(றுக்கப்பட்ட)வைகளிலிருந்து நீங்களும் புசியுங்கள்: கஷ்டப்படும் ஏழைக்கும் உண்ணக்கொடுங்கள். (22:28)

فَكُلُواْ مِنۡهَا وَأَطۡعِمُواْ ٱلۡقَانِعَ وَٱلۡمُعۡتَرَّ

அதிலிருந்து நீங்களும் உண்ணுங்கள் (தேவையு-டையவராய் இருந்தும் பிறரிடம்) கேட்காதவர்-களுக்கும், அதை யாசித்துக் கேட்டவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள். (22:36)

عَنْ سَلَمَةَ بْنِ الأَكْوَعِ قَالَ قَالَ النَّبِىُّ صلى الله عليه وسلم « مَنْ ضَحَّى مِنْكُمْ فَلاَ يُصْبِحَنَّ بَعْدَ ثَالِثَةٍ وَفِى بَيْتِهِ مِنْهُ شَىْءٌ » . فَلَمَّا كَانَ الْعَامُ الْمُقْبِلُ قَالُوا يَا رَسُولَ اللَّهِ نَفْعَلُ كَمَا فَعَلْنَا عَامَ الْمَاضِى قَالَ « كُلُوا وَأَطْعِمُوا وَادَّخِرُوا فَإِنَّ ذَلِكَ الْعَامَ كَانَ بِالنَّاسِ جَهْدٌ فَأَرَدْتُ أَنْ تُعِينُوا فِيهَا (رواه البخاري)

நபி ﷺ அவர்கள் உங்களில் யார் குர்பானிப் பிராணியை அறுக்கிறாரோ அவர் (அறுத்ததிலிருந்து) மூன்று நாட்களுக்குப் பின் (அதிலிருந்து எதுவும் அவரது வீட்டில் எஞ்சியிருக்கும் நிலையில்) காலைப் பொழுதை அடைய வேண்டாம் என்று சொன்னார்கள். அடுத்த ஆண்டு வந்தபோது மக்கள் அல்லாஹ்வின் தூதரே! சென்ற ஆண்டு செய்ததைப் போன்றே (இந்த ஆண்டும்) நாங்கள் செய்ய வேண்டுமா ? என்று கேட்டார்கள். நபி ﷺ அவர்கள் நீங்களும் அதிலிருந்து உண்டு (மற்றவர்களுக்கும்) உண்ணைக் கொடுங்கள் சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் , கடந்த ஆண்டில் மக்களுக்கு (பஞ்சத்தால்) சிரமம் ஏற்பட்டிருந்தது. ஆகவே நீங்கள் அந்தச் சிரமத்தைப் போக்க (அவர்களுக்கு) உதவ வேண்டும் என்று நான் விரும்பினேன் என்று பதிலளித்தார்கள். (அறிவிப்பாளர்: சலமா பின் அக்வஃ ؓ, நூல்: புகாரி 5569)

குர்பானியின் இறைச்சி, தோல் ஆகியவற்றை தர்மம் செய்யுமாறு நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த தர்மத்தை முற்றிலும் ஏழைகள் பயன்பெறும் வகையில் அளித்திட வேண்டும்.

குர்பானி பிரணியிலிருந்து எதையும் தோல் உரிப்பவருக்கு கூலியாக தரக்கூடாது

عن عَبْدَ الرَّحْمَنِ بْنَ أَبِى لَيْلَى أَنَّ عَلِيًّا رضى الله عنه أَخْبَرَهُ أَنَّ النَّبِىَّ صلى الله عليه وسلم أَمَرَهُ أَنْ يَقُومَ عَلَى بُدْنِهِ ، وَأَنْ يَقْسِمَ بُدْنَهُ كُلَّهَا ، لُحُومَهَا وَجُلُودَهَا وَجِلاَلَهَا ، وَلاَ يُعْطِىَ فِى جِزَارَتِهَا شَيْئًا (رواه البخاري)

நபி ﷺ அவர்கள் தமது குர்பானி ஒட்டகங்களை பலியிடுமாறும் அவற்றின் இறைச்சி , தோல் , சேணம் ஆகிய அனைத்தையும் பங்கிடுமாறும் உரிப்பதற்குக் கூலியாக/ அவற்றில் எதையும் கொடுக்கக் கூடாது என்றும் எனக்குக் கட்டளையிட்டார்கள். (அறிவிப்பாளர்: அலீ ؓ, நூல்: புகாரி 1717)

குர்பானி இறைச்சியை எத்தனை நாள் வரையில் உண்ணலாம்.

عَنْ عَابِسٍ قَالَ قُلْتُ لِعَائِشَةَ أَنَهَى النَّبِىُّ – صلى الله عليه وسلم – أَنْ تُؤْكَلَ لُحُومُ الأَضَاحِىِّ فَوْقَ ثَلاَثٍ قَالَتْ مَا فَعَلَهُ إِلاَّ فِى عَامٍ جَاعَ النَّاسُ فِيهِ ، فَأَرَادَ أَنْ يُطْعِمَ الْغَنِىُّ الْفَقِيرَ ، وَإِنْ كُنَّا لَنَرْفَعُ الْكُرَاعَ فَنَأْكُلُهُ بَعْدَ خَمْسَ عَشْرَةَ (رواه البخاري)

நான் ஆயிஷா ؓ அவர்களிடம் (ஈதுல் அள்ஹா பெருநாளில் அறுக்கப்படும்) குர்பானி

இறைச்சியை மூன்று நாட்களுக்கு மேல் வைத்துச் சாப்பிடுவதை நபி ﷺ அவர்கள் தடை செய்தார்களா? என்று கேட்டேன். அவர்கள் மக்கள் (பஞ்சத்தால்) பசி பட்டினியோடு இருந்த ஓர் ஆண்டில்தான் அவர்கள் அப்படி(த் தடை) செய்தார்கள். அப்போது நபி ﷺ அவர்கள் (பட்டினியைப் போக்க) வசதி உள்ளவர்கள் ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.(பிறகு) நாங்கள் ஆட்டுக்காலை எடுத்து வைத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகும் கூட அதைச் சாப்பிட்டு வந்தோம் என்று பதிலளித்தார்கள். **(அறிவிப்பாளர்: ஆபிஸ் பின் ரபீஆ அல்கூஃபீ ؓ, நூல்: புகாரி 5423)**

அல்லாஹ் நம் அனைவருக்கும் குர்ஆன் மற்றும் சுன்னாவின் அடிப்படையில் குர்பானியை நிறைவேற்றிட அருள்புரிவானாக! ஆமீன்.



DIIC

Cultivating Islamic Knowledge

DACE ISLAMIC INFORMATION CENTER

Dhannish Nagar, Padappai, Chennai.

www.fb.com/dace

www.telegram.me/daceiic